OS: 656/2018

Date: 23.09.2024

பெயர் :சிதம்பரம்

**வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை :**</u>- 2, 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்

தாவா சொத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து எவ்வளவு விஷ்தீரனம் என்று தெரியுமா என்றால் தெரியாது. யார், யார் வழக்கு போட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும், சண்முகம், கோவிந்தன் மீது வழக்கு போட்டுள்ளார். கோவிந்தன் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இறந்துவிட்டார். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் பெரியோர்கள் இருந்த காலத்தில் கைக்காட்டி பூமியை அனுபவித்து வந்தார்கள் தற்போது முறையாக பாகம் செய்யவேண்டும் என வழக்கு போட்டுள்ளார். வாதி சண்முகம் சொல்லிதான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆம். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அவர்கள் பாட்டன் பெயரில் இருந்தது. அவர் பாட்டன் பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. முருகன், சின்னபையன் ஆகியோர்களை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இறந்துபோன கோவிந்தனின் தந்தை பெயர்தான் முருகன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சின்னபையனுக்கு, கந்தசாமி மற்றும் வீரமுத்து என்ற இருமகன்கள் இருந்தார்கள் என்றால் அது பற்றி தெரியும். சண்முகத்தின் தந்தை பெயர் என்ன என்றால் கந்தசாமி ஆகும். சின்னபையன், அவரது மகன்கள் கந்தசாமி அவருடன் உடன்பிறந்த வீரமுத்து ஆகியோர்கள் காலமாகிவிட்டார்கள் என்றால் சரிதான். சண்முகத்தின் உடன் பிறந்த சகோதரிகள் பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர்களுக்கு வெவ்வேறு ஊர்களில் திருமணம் செய்துகொடுத்துவிட்டார்கள். கந்தசாமிக்கு பிறந்த ருக்மணி, பூபதி ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும்.

மேற்படி ருக்மணி, பூபதி ஆகியோர்கள் கந்தசாமி இறந்தபின்பு தாவாசொத்து உள்ள வில்லை வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் 20 ஆண்டுகள் குடியிருந்து வருகிறார்கள். அதில் ருக்மணி என்பவர் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அந்த வீட்டில் ரமேஷ் குடியிருந்து வருகிறார். சண்முகம் சேலத்தில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். கருப்பணம்பட்டியில் தாவா சொத்தில் சண்முகத்தின் ஒரு அட்டை வீடு

உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் எத்தனை வில்லை வீடு மற்றும் தார்சு வீடுகள் உள்ளது என்றால் 3 வில்லை வீடு மட்டும் உள்ளது. இறந்துபோன கோவிந்தன் நிலத்தில் முனியப்பன் சிலை உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி முனியப்பன் சிலை எவ்வளவு செண்ட் நிலத்தில் வைத்துள்ளார் என்றால் சிறிய பகுதியில் முனியப்பன் சிலை உள்ளது. முனியப்பன் சிலைக்கு ஆடி மாதம் 1 ம் தேதி கோவிந்தன் மகன் விழா எடுப்பார் என்றால் சரிதான். மேற்படி விழாவில் ஆடுகள் வெட்டப்பட்டு அனைவருக்கும் உணவு அளிப்பார் என்று சொன்னால் சரிதான். மேற்படி கோவிந்தன் மகன் ஆடி மாதம் 1 ம் தேதி எடுக்கும் விழாவில் எனக்கு பிரசாதங்கள் மற்றும் உணவுகள் அளிப்பார் என்றால் சரிதான். கோவிந்தன் இருக்கும் நிலத்தில் தான் அவரது தாயார் அய்யம்மாள் காலமானபோது அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். கோவிந்தனின் மகள் அமுதா காலமானபோது அவரது உடலும் மேற்படி கோவிந்தன் நிலத்தில் தான் அடக்கம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். கோவிந்தன் நிலத்தில் தேக்குமரம், முருங்க மரம், தென்னை மரங்கள் உள்ளது. கோவிந்தன் காலமான பின்னிட்டு அவரது மகன் ராஜா கோவிந்தன் இருந்த நிலத்தில்தான் வில்லை வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் கோவிந்தனுக்கு பக்கத்து காடு என்றால் கோவிந்தன் நிலத்திற்கும் தெற்கே உள்ள காட்டில் இருக்கிறேன். கோவிந்தன் மகன் ராஜா அவரது நிலத்தில் அவரைக்காய் விவசாயம் செய்து அருவடை செய்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சண்முகம் அவரது நிலத்தில் அவரைக்காய் விவசாயம் செய்தார் அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் பங்காளிகள் என்றால் சரிதான். அவரவர்கள் அனுபவத்தை வைத்து வருவாய் துறையில் பட்டா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 15 ஆண்டுகளுக்கு முன்பு வாதிக்கும், கோவிந்தனுக்கு பஞ்சாயத்து நடந்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். மேற்படி பஞ்சாயத்து எந்த தேதி, மாதத்தில் நடந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்தை யார் கூட்டினார் என்றால் கந்தசாமி தான் கூட்டினார். பஞ்சாயத்து யார் யார் முன்னிலையில் நடைபெற்றது என்றால் குப்பன், வீரமுத்து, குப்புசாமி ஆகியோர்கள் முன்னிலையில் நடந்தது. நான் மேற்படி பஞ்சாயத்தில் இருந்தேன். மேற்படி பஞ்சாயத்து எந்த இடத்தில் நடந்தது என்றால் கந்தசாமி வீட்டு பின்பக்கத்தில் உள்ள இடத்தில்

நடந்தது. பஞ்சாயத்தில் பிரதிவாதிகள் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் வீரமுத்து, கந்தசாமி, கோவிந்தன் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள். மேற்படி பஞ்சாயத்தில் எழுதப்பட்ட பஞ்சாயத்து முச்சலிக்கா யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் முச்சலிக்கா எழுதவில்லை. 2 வது பஞ்சாயத்தில் தான் பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதப்பட்டது அது யாரிடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. முச்சலிக்கா எழுதுவதற்கு பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் கந்தசாமி பெயரில் வாங்கப்பட்டது. நான் பொய்யாக 15 ஆண்டுகளுக்கு முன்பாக நடக்காத பஞ்சாயத்தை நடந்ததாக எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கந்தசாமி இறந்த பின்னிட்டு நடந்த பஞ்சாயத்தில் பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதப்பட்டது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 2 வது பஞ்சாயத்து எந்த தேதி மாதம் வருடத்தில் நடந்தது என தெரியுமா என்றால் ஆண்டு மட்டும் தெரியும், தேதி, வருடம் ஞாபகம் இல்லை. வாதியே வழக்குரையில் சொல்லப்படாத விசயங்களை நான் எனது முதல் விசரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

07.11.1933 ல் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக கோவிந்தன் தந்தை முருகன் அவரது மனைவி அய்யம்மாள் என்பவருக்கு தாவா சொத்தில் சில பகுதிகளை தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் அது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி சண்முகம் எனக்கு எந்த வகையில் உறவினர் என்றால் அண்ணன் தம்பிகள் ஆவார்கள். வாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ஏற்கனவே பிரிவினை ஆகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>:- இல்லை.

**(3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.)**

ஒப்பம்/-PW2

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.